Source: *Tamil Murasu*, p3
Date: 3 April 2017

மேல்நிலைப்பள்ளி மாணவர்களோடு இவ்வாண்டு உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் பங்கேற்பு

தமிழ் வார்த்தைகள் முட்டி மோதிய ‘யுத்தம்’

அஷ்வினி செல்வராஜ்

இளையர்களுக்காக இளையர்கள் ஏற்பாடு செய்திருந்த சொல்வள மேம்பாட்டுப் போட்டியான ‘யுத்தம்’ வார்த்தைப் போராக அரங்கேறியது.

தேசியப் பல்கலைக்கழக தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில் நடை பெற்ற இப்போட்டி, இந்த ஆண்டின் தமிழ்மொழி மாதத்தில் இளையர்களுக்காக நடைபெற்ற முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.

எழுத்து, பேச்சுத்தமிழில் மாணவர்களுக்குள்ள திறனை வெளிப்படுத்த நல்லதோர் தளமாக நிகழ்ச்சி அமைந்ததோடு, மாணவர்களிடையே அன்றாடப் பயன்பாட்டில் இருக்கும் சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதைப் பற்றி அவர்கள் கற்றுக்கொள்ள சிறந்த வாய்ப்பாகவும் அமைந்தது.

சென்ற ஆண்டு முதன்முறையாக மேல்நிலை மாணவர்களுக்காக மட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டி, இவ்வாண்டு உயர்நிலைப் பள்ளிகளும் பங்கேற்கும் வண்ணம் விரிவுபடுத்தப்பட்டது.

உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்தில் நேற்று முன்தினம் இப்போட்டியின் அரையிறுதி, இறுதிச் சுற்றுகள் நடைபெற்றன.

நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக தமிழர் பேரவையின் தலைவர் வெ. பாண்டியன் கலந்து கொண்டார்.

> “வார்த்தை விளையாட்டுகளில் சொற்களைக் கண்டுபிடிக்க, சந்தம், எதுகை, மோனை என மாறுபட்ட உத்திகளைக் கையாண்டோம். இவ்வாண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கேலிப்படச் சுற்றில் படங்களில் உள்ளவற்றை முழுமையாகத் தமிழிலேயே குழு உறுப்பினருக்கு விளக்கியது சவாலானதாக இருந்தது.
>
> **ராஃபிள்ஸ் கல்வி நிலைய மாணவி தாரணி சிவகுமரன்**

படங்களை இணைத்துச் சொற்களையும் சொற்றொடர்களையும் கண்டுபிடிப்பது, வார்த்தை விளையாட்டு, கேலிசித்திர பட விளையாட்டு ஆகியவற்றை உள்ளடக்கியிருந்த ‘யுத்தம்’ நிகழ்ச்சியில், தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது மாணவர்களின் ஆர்வத்தை பெரிதும் அதிகரித்தது.

புதுமையான, மாணவர்களுக்குப் பிடித்த முறையில் தமிழ் மொழியை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்த விளையாட்டுகள் அமைக்கப் பட்டிருந்தன.

மார்ச் 26ஆம் தேதி நடைபெற்ற தகுதிச் சுற்றில் உயர்நிலை, மேல்நிலைப் பிரிவுகளில் நாற்பது போட்டியாளர்களைக் கொண்ட மொத்தம் இருபது குழுக்கள் பங்குபெற்றன.

அவற்றில் ஒவ்வொரு பிரிவிலும் எட்டு குழுக்கள் அரையிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றன. நான்கு குழுக்கள் போட்டியிட்ட இறுதிச் சுற்றில் உயர்நிலைப் பிரிவில் யுவான் சிங் உயர்நிலைப் பள்ளியும் மேல்நிலைப் பிரிவில் ராஃபிள்ஸ் கல்வி நிலையமும் வாகை சூடின.

மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் நிகழ்ச்சிக்கு ஆதரவளிக்க வருகை புரிந்தவர்களுக்கும் படங்களை இணைத்து சொற்களையும் சொற்றொடர்களையும் கண்டுபிடிக்கும் சுற்று நடைபெற்றதில் எட்டு பார்வையாளர்கள் கலந்துகொண்டு தங்களுடைய தமிழ்த் திறனை வெளிக்காட்டினர்.

யுவான் சிங் உயர்நிலைப் பள்ளியின் வெற்றிக் குழுவைச் சேர்ந்த விக்கி விஜயகுமார், 17, “நாங்கள் தினமும் பள்ளி முடிந்து நண்பர்களுடன் பயிற்சி செய்தோம். பரவலாகப் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களை இணையத்திலிருந்து தொகுத்து அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து பயிற்சி மேற்கொண்டோம்,” என்று கூறினார்.

விறுவிறுப்பான விளையாட்டின் முடிவுகள் என்னாகுமோ என்ற தவிப்பில் சீடார் உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த பாலமுருகன் தீபிகா, பாலசுப்பிரமணியன் சஹானா.

வார்த்தை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற ஏசிஎஸ் (ஐ) உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் மணி செந்தில்நாதன் விக்னேஷ் (இடம்), ரேக்ஸ் ஹுபர்ட் ஃபிலிப் ஆகியோருடன் போட்டி அங்கத்தை நடத்திய சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மாணவர் சரவணன்.
படங்கள்: சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக தமிழ்ப் பேரவை

உயர்நிலை ஐந்தாம் வகுப்பில் (வழக்கநிலை) பயிலும் அவர், போட்டியில் இடம்பெற்ற வார்த்தை விளையாட்டான ‘டெபூ’ சற்று கடினமாக இருந்ததால், கொடுக்கப்பட்ட நேர அளவிற்குள் விரைவாக குறிப்புகளை வழங்கி யூகிக்க பயிற்சி மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

மார்ச் மாத பள்ளிவிடுமுறையின்போது தன்னுடைய மாணவர்களுக்குப் பொது அறிவு சார்ந்த கேள்விகளில் கூடுதல் பயிற்சி அளித்து அதன்வழி அவர்களைப் போட்டிக்குத் தயார்படுத்திய தாகக் கூறினார் யுவான் சிங் உயர்நிலைப்பள்ளியின் தமிழாசிரியர் சேகர் கவிதன். யுவான் சிங் உயர்நிலைப்பள்ளி இப்போட்டியில் முதல்முறையாகக் கலந்து கொண்டது.

“கட்டுரை, கருத்தறிதல் என வழக்கமாக பள்ளிகளில் நடக்கும் பாடங்களின் அமைப்பிலிருந்து இந்தப் போட்டியின் அமைப்பு வேறுபட்டதாக இருந்ததால், மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் போட்டிகளில் கலந்துகொண்டனர்,” என்றும் அவர் கூறினார்.

உயர்நிலைப்பள்ளிகளுக்கான பிரிவில் பெண்டமியர் உயர்நிலைப் பள்ளியும் ஆங்கிலோ சீன தன்னாட்சி பள்ளியும் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் வந்தன. மேல்நிலைப் பிரிவில், விக்டோரியா தொடக்கக்கல்லூரியும் மெரிடியன் தொடக்கக்கல்லூரியும் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பிடித்தன.

“வார்த்தை விளையாட்டான ‘டெபூ’ சுற்றில் கொடுக்கப்பட்ட சொற்களை கண்டுபிடிக்க, சந்தம், மோனை, எதுகை என சில குறிப்பிட்ட உத்திகளை கையாண்டோம். குறிப்பாக, இவ்வாண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கேலிப் பட ‘காமிக்ஸ் ஸ்டிரிப்’ சுற்றில் படங்களில் உள்ளவற்றை முழுமையாகத் தமிழிலேயே குழு உறுப்பினருக்கு விளக்கியது சவாலானதாக இருந்தது,” என்று கூறிய ராஃபிள்ஸ் கல்வி நிலைய மாணவி தாரணி சிவகுமரன், 18. இப்போட்டியின் மூலம் மேம்பட்டுள்ள சொல்வளம் பள்ளியில் கட்டுரைப் பாடங்களை எழுதுவதற்கும் பெரிய அளவில் பயன்படும் என்றும் அவர் கூறினார்.

“சென்ற ஆண்டு மேல்நிலை மாணவர்களுக்கு இப்போட்டியை ஏற்பாடு செய்தபோது, இப்போட்டி மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதால், இந்த ஆண்டு உயர்நிலைப்பள்ளிகளையும் இதில் இணைக்க எண்ணினோம். போட்டியின் சுவை குன்றாத அதே வேளையில் பேச்சுத் தமிழில் மாணவர்களின் திறனை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாண்டு கேலிப்பட ‘காமிக்ஸ் ஸ்டிரிப்’ சுற்றை நாங்கள் அறிமுகப்படுத்தினோம்,” என்று கூறினார் ‘யுத்தம்’ போட்டியின் ஏற்பாட்டுக் குழுத் தலைவரான குமாரி லாவண்யா நாராயணன், 21.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.